THILLAI MAIL
தில்லை மெயில்
09 August 2025

# கடற்பாசி வளர்ப்பு, கூண்டு முறை மீன்வளர்ப்பு திட்டம் காரைக்காலில் மீன்வளத்துறை செயலர் ஆய்வு



காரைக்கால், ஆக. 9–

மீனவ மக்களின் பல்வேறு திட்டங்களில் ஒன்றான கடற்பாசி வளர்ப்பு திட்டம் பல்வேறு மாநிலங்களில் தொடங்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் உள்ளன. மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் இந்த கடற்பாசி உற்பத்தியை விரிவடைய செய்து கரையோர மக்களுக்கு பல வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

இவ்வாறு அறுவடை செய்யப்படும் கடற்பாசிகள் உணவுப் பொருளாகவும், அழகு சாதன பொருட்கள், தொழில்துறை மற்றும் மருத்துவ பயன்பாட்டிற்கு என பல விதங்களில் பயன்படுத்தப்படுகிறது.

மீனவப் பெண்களுக்கான இந்த வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் புதுச்சேரி பிராந்தியத்தில் பூ, புதுக்குப்பம் மற்றும் பனித்திட்டு கடல் பகுதிகளிலும், காரைக்கால் பிராந்தியத்தில், பட்டினச்சேரி மற்றும் கருக்காளாச்சேரி ஆகிய மீனவ கிராமங்களின் அருகில் ஒரு ஆண்டு காலத்திற்கு கடல்மீன் கூண்டு மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி சாகுபடி படல்களை கடலில் நிறுவி அவற்றை பராமரித்து மீனவ மகளிர்க்கு பயிற்சி அளித்து செயல் விளக்கமாக ஆய்வின் இறுதியில் அறிக்கை தயார் செய்து இந்த கடற் பாசி வளர்ப்பின் பயன்களை, புதுச்சேரி மற்றும் காரைக்கால் மற்ற கடல் பகுதிகளுக்கு விரிவு செய்யப்படவுள்ளது.

இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முதற் கட்ட ஆய்விற்காக மத்திய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்திற்கு புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் தலா இரு மீனவ கிராமங்களுக்கு ரூ.50 லட்சம் மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் 2025 ல் கையொப்பமிடப்பட்டது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கடல் பாசி வளர்ப்பு மற்றும் கூண்டு முறை மீன்வளர்ப்பு திட்டம் என்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக நேற்று (8.8.25) காரைக்கால் மாவட்டத்தில் பட்டினச்சேரி மற்றும் கருக்களாச்சேரி ஆகிய இரு மீனவ கிராமங்களில் கடற் பாசி வளர்ப்பிற்கான படல்களை கடலில் நிறுவ செய்யும் நிகழ்ச்சியினை புதுச்சேரி மீன்வளத்துறையின் செயலர் மணிகண்டன் கொடியசைத்து தொடங்கி வைத்து, கடல் பாசி வளர்ப்பில் ஈடுபடும் மீனவ மகளிருடன் கலந்துரையாடினார்.

இத்திட்டத்தை செயல்படுத்தும் மத்திய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட விஞ்ஞனிகளிடம் கடற் பாசி வளர்ப்பு குறித்தும் கேட்டறிந்தார். 'அதனைத் தொடர்ந்து, புதுச்சேரி மீன்வளத்துறையின் செயலர் மீன்பிடி படகின் மூலம் கடலுக்கு சென்று கடல் பாசி வளர்ப்பு படல்களை கடலில் நிறுவ செய்யும் நிகழ்வினையும் பார்வையிட்டார்.

அவ்வமயம், புதுச்சேரி மீன்வளத்துறை இயக்குநர் முகமது இஸ்மாயில், இணை இயக்குநர் தெய்வசிகாமணி, துணை இயக்குநர்கள் ராஜேந்திரன், கோவிந்தசாமி மற்றும் காரைக்கால் மீன்வளத்துறை ஆய்வாளர் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இத்திட்டத்தை செயல்படுத்தும் மத்திய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட தலைமை விஞ்ஞானி ஜான்சன், மண்டபம் நிலையத்தின் தலைவர் வினோத் மற்றும் முதன்மை விஞ்ஞானி அனிகுட்டன், பட்டினச்சேரி மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், கடற் பாசி வளர்ப்பில் ஈடுபடும் மீனவ மகளிர், மற்றும் பெருந்திரளான மீனவர்களும் கலந்து கொண்டனர்.